2018 ஜனவரி 9] **[பேரவைத் தலைவர்]**

சொல்கிறவர்களையெல்லாம் நான் பேச அனுமதிக்க முடியாது. (குறுக்கீடு) நீங்கள் அதைச் சொல்வதற்கு நான் எதற்கு இந்தச் சபையில்? (குறுக்கீடு) இவர்களைப் பேசச் சொல்லுங்கள்; அவர்களைப் பேசச் சொல்லுங்கள் என்று சபாநாயகருக்கு நீங்கள் சொல்வதை நான் அனுமதிக்க முடியாது. (குறுக்கீடு) அது எனக்குத் தெரியும்; நான் பார்த்துக்கொள்கிறேன். நீங்கள் உட்காருங்கள்.

பிற்பகல் 12–30

(இ) திருக்கோவிலூர் தொகுதி, வசந்தகிருஷ்ணாபுரம் கிராமம், தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்த மூன்று இளைஞர்கள் மர்ம மரணம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் க. பொன்முடி அவர்கள்.*

முனைவர் க. பொன்முடி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விழுப்புரம் மாவட்டம், திருக்கோவிலூர் சட்டமன்றத் தொகுதியில் உள்ள வசந்தகிருஷ்ணாபுரம் கிராமத்தைச் சேர்ந்த 3 இளைஞர்கள், தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் மர்மமான முறையில் கடந்த 31–12–2017 அன்று இரவு அடிச்சானூர் சாலையில் உள்ள முருகன் கோயில் அருகில் உயிருக்கு ஆபத்தான நிலையில் கிடந்தனர். அந்த மூவரில் இருவர், கிருபாநிதி பி.இ., படித்துக் கொண்டிருந்த ஒரு மாணவர்; வீரமணி, +2 படித்துக் கொண்டிருந்த மாணவர். இருவரும் உயிர் நீத்துவிட்டார்கள். கோபிநாத் என்பவர் இன்றும் உயிருக்கு ஆபத்தான நிலையிலே மருத்துவமனையிலே இருக்கிறார். ஆக, இந்த மூவருடைய நிலைமையைக் கருத்தில்கொண்டு உடனடியாக அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென வலியுறுத்தி, 1 ஆம் தேதி விடுதலை சிறுத்தைகள் மற்றும் அனைத்துக் கட்சிகளின் சார்பில் ஆர்ப்பாட்டமும் நடைபெற்றது. ஆனால், சரியான நடவடிக்கை இல்லாத காரணத்தினால், 7 ஆம் தேதிதான் இறந்தவர்களின் உடலையே பெற்றுச் சென்றிருக்கிறார்கள். 1 ஆம் தேதி இறந்தவர்களுடைய உடலை நேற்றைக்கு முதல் நாள் 7 ஆம் தேதிதான் அந்தக் கிராமத்திலே இருப்பவர்கள் பெற்றுச் சென்றிருக்கிறார்கள்.*

சம்பந்தப்பட்டவர்கள்மீது வன்கொடுமை சட்டத்தின்கீழ் F.I.R. பதியப்பட்டிருக்கிறது. இந்த நிலையில், ஜிப்மர் அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருக்கிற அந்த இளைஞருக்கும் உரிய சிகிச்சை அளிக்க வேண்டும்; அதற்காக உரிய நிதியை, முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து கொடுக்க வேண்டுமென்று நான் இப்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். அவர்கள் மிகவும் ஏழ்மையான மாணவர்கள். இறந்த கிருபாநிதி என்பவருக்கு 4 வயது மற்றும் 3 வயதிலே இரண்டு தம்பிகள் இருக்கிறார்கள். அதேபோல, வீரமணிக்கு 21 வயதில் திருமணம் ஆகாத ஒருவர் இருக்கிறார். அவருடைய தந்தையார் மனநிலை பாதிக்கப்பட்டவர். ஆக, மிக ஏழ்மையான நிலையில் வாழும் அவர்களது குடும்பத்தினருக்கு முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து ஏதாவது நிதியுதவியை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்வதோடு, யார் தவறு செய்திருந்தாலும், அவர்கள்மீது உரிய நடவடிக்கையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எடுக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விழுப்புரம் மாவட்டம், திருக்கோவிலூர் அருகிலுள்ள வசந்தகிருஷ்ணாபுரம் கிராமத்தைச் சேர்ந்த சுப்பிரமணியன் என்பவர் கடந்த 1–1–2018 அன்று அதிகாலை அரகண்டநல்லூர் காவல் நிலையத்தில் அளித்த புகாரில், 31–12–2017 அன்று இரவு புத்தாண்டு கொண்டாடுவதற்காக வீட்டை விட்டு வெளியே சென்ற அவரது மூத்த மகன் கிருபாநிதி, அவரது நண்பர்கள் கோபி மற்றும் வீரமணி ஆகியோர் அடிச்சானூர் சாலையில் காயங்களுடன் கிடப்பதாக கிராமத்தைச் சேர்ந்த கிருஷ்ணமூர்த்தி என்பவர் தகவல் கூறியதாகவும், அதனைத் தொடர்ந்து அங்கு சென்று அவர்கள் மூவரையும் ஆம்புலன்ஸ்மூலம் திருக்கோவிலூர் அரசு மருத்துவமனைக்குக் கொண்டுசென்று, பின்னர் மருத்துவர்கள் பரிந்துரையின்பேரில் மேல் சிகிச்சைக்காக முண்டியம்பாக்கம் அரசு மருத்துவமனைக்குக் கொண்டு சென்றதாகவும், அங்கு சிகிச்சை பலனின்றி அவரது மகன் கிருபாநிதி இறந்துவிட்டதாகவும், மற்ற இருவரையும் பாண்டிச்சேரி ஜிப்மர்

2018 ஜனவரி 9] **[திரு. எடப்பாடி கே. பழனிசாமி]**

மருத்துவமனைக்கு சிகிச்சைக்காகக் கொண்டு சென்றுள்ளதாகவும், தனது மகனின் இறப்பில் சந்தேகம் இருப்பதாகவும், இதுகுறித்து விசாரித்து தக்க நடவடிக்கை எடுக்குமாறும் தெரிவித்திருந்தார். அதன்பேரில், காவல் துறையினர் வழக்குப் பதிவு செய்து, விசாரணை மேற்கொண்டனர்.

இவ்வழக்கில் திருக்கோவிலூர் உட்கோட்ட காவல் துணைக் கண்காணிப்பாளர் தலைமையில் தடய அறிவியல் துறையினர் சம்பவ இடத்திற்குச் சென்று பார்த்து, தடயங்களைச் சேகரித்தும், பின்னர் முண்டியம்பாக்கம் அரசு மருத்துவமனைக்குச் சென்று, இறந்துபோன கிருபாநிதியின் பிரேதத்தைப் பார்வையிட்டு, அவருக்கு ஏற்பட்டிருந்த காயங்களின் தன்மை குறித்தும் மருத்துவர்களிடம் விசாரணை மேற்கொண்டனர். இந்த நிலையில் 1–1–2018 அன்று இரவு சிகிச்சை பலனின்றி வீரமணி இறந்துள்ளார். கோபி தொடர்ந்து ஆபத்தான நிலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

இவ்வழக்கில் காவல் துறையினர் பல்வேறு கோணங்களில் தொடர்ந்து புலன் விசாரணை மேற்கொண்டதில், மணிகண்டன், த/பெ. ஏழுமலை என்பவர் டிராக்டர் வாகனத்தில் வந்து கொண்டிருக்கும்போது, மேற்கண்ட நபர்கள்மீது மோதி விபத்தை ஏற்படுத்தியது தெரிய வருகிறது. குற்றவாளியும் கைது செய்யப்பட்டுள்ளார்.

பிற்பகல் 12–35

விபத்தில் உயிரிழந்த திரு. கிருபாநிதி மற்றும் திரு. வீரமணி ஆகியோரின் குடும்பத்தினருக்குத் தலா ஒரு இலட்சம் ரூபாயும், காயமடைந்த திரு. கோபிநாத்திற்கு ஐம்பதாயிரம் ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன். இந்த விபத்தில் உயிரிழந்தோரின் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துகொள்கிறேன். இந்த விபத்தில் காயமடைந்த கோபிநாத்திற்கு நல்ல முறையில் சிகிச்சை அளிக்க மாவட்ட நிருவாகத்திற்கு உத்தரவிட்டுள்ளேன் என்பதை மாண்புமிகு சட்டப் பேரவை உறுப்பினர் அவர்களுக்கு தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

TRUTH ALONE TRIUMPHS